செ.வெ.எண்: 11 நாள்: 03.02.2017

அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.158.82 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

தமிழகஅரசு ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், இரும்பாளி ஊராட்சி, கூத்தினிப்பட்டியில் பிரதம மந்திரி கிராம சாலை திட்டத்தின் கீழ் ரூ.134.55 இலட்சம் மதிப்பீட்டில் கூத்தினிப்பட்டி முதல் ஊரப்பட்டி வரை அமைக்கப்பட்டு வரும் தார்சாலை பணியையும், வீரப்பட்டி ஊராட்சி, தான்றீஸ்வரத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.70000 மதிப்பீட்டில் நடவு செய்யப்பட்டுள்ள மரக்கன்றுகள் பணியையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் சின்னப்பநாயக்கன்பட்டியில் ரூ.13.77 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள தார்சாலை பணியையும், ரூ.4 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கலையரங்க கட்டுமானப்பணியையும், முக்கணாமலைப்பட்டி ஊராட்சி, புதூரில் ரூ.90000 மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கைப்பம்பு பணியையும், ரூ.4 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கலையரங்க கட்டுமானப்பணியையும், கிலாப்பட்டியில் ரூ.90000 மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கைப்பம்பு பணியையும் என மொத்தம் ரூ.158.82 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது ஊராட்சிகளில் உள்ள வேலிக்கருவை மரங்களை முற்றிலுமாக அகற்றவும், நடவு செய்யப்பட்டுள்ள மரக்கன்றுகளை தினமும் நீர் ஊற்றி பராமரிக்கவும், சாலைப்பணிகளில் தரமான ஜல்லி உள்ளிட்ட பொருட்களை கொண்டு சாலை அமைக்கவும், குடிநீர் கைப்பம்புகள் சீராக இயங்குவதை தொடர்ந்து கண்காணிக்கவும், முடிவுற்ற பணிகளை உரிய முறையில் பராமரிக்கவும், மேலும் நடைபெறும் பணிகளை தரமான கட்டுமானப்பொருட்களை கொண்டு விரைவாக கட்டிமுடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வின் போது வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பாஷியம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.